02 b

பொது சுற்றறிக்கை கடித இலக்கம்:02-205 / 2016

எனது இலக்கம் - MH/AD/01/09-01
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
“சுவசிறிபாய”
385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு – 10.
2016.12.19

மாகாண சுகாதார சேவைகள் செயலாளர்கள்,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
போதனா வைத்தியசாலைகள் பணிப்பாளர்கள், விஷேட திட்ட பணிப்பாளர்கள்,
மத்திய அமைச்சின் கீழுள்ள சகல வைத்தியசாலைகள் மற்றும் தாபன தலைவர்கள்

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொற்றா நோய்) பதவி
## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

மேற்குறிப்பிட்டுள்ள பதவிக்கு இந்த விளம்பர அறிவித்தலின், பந்தி 08 இல் உள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சில் பணியாற்றும் சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரத்தில் உள்ள மருத்துவ அலுவலர்கள் மற்றும் பல் அறுவை சிகிச்சை வைத்திய நிபுணர்கள் ஆகியோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. உரிய விண்ணபப்படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரித்து செயலாளர், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, “சுவசிறிபாய” 385, பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10 என்னும் முகவரிக்கு **2016.12.30** திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இவ்வமைச்சின் செயலாளருக்கோ, அல்லது அமைச்சில் பணியாற்றும் வேறு எந்த அலுவலருக்கோ அவர்களது தனிப்பட்ட பெயர்களுக்கு அனுப்பக்கூடாது.

03. தமது விண்ணப்பங்களை திரும்பப் பெற்றுக்கொள்ள விரும்பும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவு திகதியிலிருந்து இரண்டு வாரங்களினுள் எனக்கு அறிவிப்பதனூடாக அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கப்படுவர். விண்ணப்பதாரியொருவர் மேற்படி பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் அவர் அப் புதிய பதவிக்கு நியமிக்கப்படுவார்.

04. கடமை விபரம்:

I. தொற்றா நோய் விடய துறைக்குரிய பிரதான பிரிவான தொற்றா நோய், உளநல சுகாதாரம், புற்று நோய் ஒழிப்புப்பிரிவிற்குரிய சகல கண்காணிப்பு மற்றும் நெறிப்படுத்தல்.

II. தொற்றா நோய் விடய துறைக்குரிய கொள்கைகள் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்

III. பொது சுகாதாரம் தொடர்பாக முக்கியமான பிரிவாக செயற்படுகின்ற இவ்விடயத்துறை தொடர்பாக அமைச்சின் உரிய பிரிவுகளை தெளிவு படுத்தல் மற்றும் அறிவுறுத்தல் வழங்குதல்.

IV. தொற்றா நோய் துறைக்குரிய சகல பிரிவுகளின் பணிகள் தொடர்பான திட்டங்கள் தயாரித்தல்.

V. பணிப்பாளர் (தொற்றா நோய்),பணிப்பாளர் (புற்றுநோய் ஒழிப்பு வேலைத்திட்டம்),பணிப்பாளர் (உளநல சுகாதாரம்) ஆகியவற்றின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களை நெறிப்படுத்தல் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

VI. தொற்றா நோய் விடயத்துறைக்கு பணிகளுக்கு போதுமான மனித, பௌதீக மற்றும் நிதி வளம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்தல்

VII. தேசிய புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்குதல்.

VIII. தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் தடுத்தலுக்கான சுகாதார வசதிகளை பொதுவாக மற்றும் சமமாக சகல மக்களுக்கும் வழங்குவதை உறுதிப்படுத்தல்.

IX. இத்துறைக்குரிய ஆய்வுகளை ஊக்குவித்தல் மற்றும் துறைக்குரிய நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக்குவதற்கு அறிவியல் சார்ந்த பின்னணியை உருவாக்குதல்.

X. துறைக்குரிய தேசிய மற்றும் சர்வதேச தரப்பினரின் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல் மற்றும் பராமரித்தல்.

XI. இத்துறைக்குரிய நிதியுதவிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய திட்டங்களை அறிமுகப்படுத்தல்.

XII. தொற்றா நோய் கட்டுப்படுத்துவதற்கு தேவையான ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.

XIII. இப்பிரிவின் ஊழியர்களின் மேம்பாட்டுக்குத் தேவையான பயிற்சிகள் மற்றும் ஆற்றல்களுக்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

XIV. தொற்றா நோய் கட்டுப்படுத்தலுக்காக மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்கள், பரிந்துரைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்குதல்.

XV. தொற்றா நோய், உளநல சுகாதாரம் மற்றும் புற்றுநோய் சிகிச்சை சேவையை மேம்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகள் வழங்கும் போது நிபுணத்துவ அறிவுறுத்தல்கள் வழங்குதல்

XVI. தொற்றா நோய்களுக்கான கிளினிக் வழிகாட்டல்கள் தயாரிக்கும் போது நிபுணத்துவ அறிவுகள் மற்றும் முகாமைத்துவப்படுத்தலின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல்.

XVII. போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்கள் மற்றும் உளநல நோயாளர்களை புனர் வாழ்வு, இருதய நோய் முகாமைத்துவம் மற்றும் சிறுநீரக நோய் நிவாரணத்திற்காக தேவையான நிபுணத்துவ அறிவுறுத்தல்கள் வழங்குதல்.

XVIII. தொற்றா நோய், புற்றுநோய் ஒழிப்பு மற்றும் உளநல சுகாதாரம் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது சுகாதார அமைச்சு பிரதிநிதித்துவம் வழங்குதல்.

XIX. தொற்றா நோய் தொடர்பான தகவல் அமைப்பு முறையைப் பராமரித்தல் மற்றும் தகவல் வழங்குதல்.

XX. வழங்கப்பட்டுள்ள துறை தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது தலைமைத்துவம் வழங்குதல் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்

XXI. தொற்றா நோய் தொடர்பாக வருடாந்த சஞ்சிகைக்கு பிரிவினூடு வழிகாட்டல்கள் வழங்குதல்.

**05. சேவை நியதிகளும் நிபந்தனைகளும்:-**

அ). இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவையின் அத்தியாயம் viii இன் 97 ஆவது நியதியின்படி முதலில் 01 வருட காலத்திற்கு பதில் பணிபுரியும் அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

ஆ). இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படும் மருத்துவ அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் தொழிலில் ஈடுபடுவதற்கு உரித்தற்றவர்கள் ஆவர்.

இ). இப்பதவிக்கு நியமிக்கப்படுபவர் மருத்துவ ஆளணியினர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரிவு 11:1:2:3 இற்கு அமைய, இப்பதவி இறுதி சேவை நிலை அரச பதவியாக இருப்பதுடன், இடமாற்றம் பெற முடியாததுமாகும்.

**06. சம்பள அளவுத் திட்டம்**

அ) இப்பதவிக்கு அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் பிரகாரம் SL – 3 – 2016 சம்பளப்பிரிவின் முதலாவது படி நிலை (ரூபா 88,000 – 12 x 2700 -120400 ) உரித்தாகும்.

ஆ). பட்டப்பின்படிப்பு தகைமைகளுடன் உள்ள மருத்துவ நிர்வாகத் தர அலுவலர்களுக்கு மாதாந்தம் 6000 ரூபா மருத்துவ நிர்வாக படிக் கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும்.

இ). இப்பதவிக்கு விஷேட நிபுணத்துவ மருத்துவ அலுவலர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால், அவர் விஷேட நிபுணத்துவ மருத்துவ தர அலுவலருக்கான சம்பளம் மற்றும் படிக் கொடுப்பனவினையும் பெறுவதற்கு உரித்துடையவராவார்.

**07. வயதெல்லை:**

ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்கள் என்பதால் வயதெல்லை உரித்தில்லை.

**08. தகைமைகள்**

அ) சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சில் சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தில் மருத்துவ அலுவலர்களாக அல்லது பல் சிகிச்சை நிபுணராக இருத்தல் வேண்டும்.

ஆ) மருத்துவ நிர்வாகம் தொடர்பான MD பட்டம் அல்லது MSc பட்டம் அல்லது சமூக மருத்துவ சேவை தொடர்பான MD பட்டம் அல்லது MSc பட்டம் ஆகிய இரண்டில் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு:

எனினும் 2007.04.16 ம் திகதியில் உள்ளவாறு அல்லது அதற்கு முன்பிலிருந்து, சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தில் பதவிகளை வகிப்பவர்கள் அல்லது பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவியை வகிப்பவர்களுக்கு மேற்படி கூறப்பட்ட கட்டாயமான தகைமைகள் ஏற்புடையதல்ல.

**09. நேர்முகத் தேர்வில் புள்ளி வழங்கும் முறைமை:-**

I. சேவைக்காலம்: - (மொத்த புள்ளிகள் 50)

சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தில் தொடர்ச்சியான சேவைக்காலத்திற்கு ஒவ்வொரு வருடத்திற்கும் 05 புள்ளிகள் வீதம்

II. மேற்படி 08 (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத்தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள கீமே குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் - (மொத்த புள்ளிகள் 15)

அ. விஞ்ஞான முதுமானி (மருத்துவ நிர்வாகம் / சமூக மருத்துவம்) – 10 புள்ளிகள்

ஆ. M D (மருத்துவ நிர்வாகம் / சமூக மருத்துவம்) – 15 புள்ளிகள்

குறிப்பு:

i. 2007.04.16 ஆம் திகதியில் அல்லது அத்திகதிக்கு முன்பு சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரப் பதவி ஒன்றில் நியமிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் தொடர்பில் மேற்படி தகைமைகளில் ஒன்றிற்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.

ii. 1996.07.01 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு நிரந்தர அடிப்படையில் மருத்துவ நிர்வாக தரத்திற்கு நியமிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள், அந்தத் திகதியில் விஞ்ஞான முதுமானி (MSc) (மருத்துவ நிர்வாகம்) பயிற்சி நெறியை முதற்தடவையாக புதிதாக ஆரம்பித்திருந்தால் தற்போது செயல்படும் முறைக்கு ஆகக் கூடியதாக 15 புள்ளிகள் வழங்கப்படும்.

III. பதவியுடன் தொடர்புடையதாக பாடத்துறையுடன் சம்பந்தப்பட்ட விஷேட செயற்திட்டம் - (மொத்த புள்ளிகள் 15) ஒரு செயற்திட்டத்திற்கு 03 புள்ளிகள் வீதம் (அதிகூடியது திட்டங்கள் 05 இற்கு)

IV. பதவியுடன் தொடர்புடையதாக பாடத்துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் / அறிக்கைகள் - (மொத்த புள்ளிகள் 10) ஒரு ஆய்வுகள் / அறிக்கைக்கு 02 புள்ளிகள் வீதம் (அதிகூடியது ஆய்வுகள் / அறிக்கைக்கு 05 இற்கு)

குறிப்பு :

பட்டப்பின் படிப்பிற்காக அல்லது மருத்துவ நிர்வாக பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகள் / அறிக்கைகள் அல்லது திட்டத்திற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

V. நேர்முகப்பரீட்சை - (மொத்த புள்ளிகள் 10)

மொத்த புள்ளிகள் - 100

10. விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதன் முன்னரோ கிடைக்கக்கூடியவாறு தாபன தலைவர்கள் / பன்முகப் படுத்தப்பட்ட பிரிவுகள்/ விஷேட இயக்கங்களின் தலைவர்களின் ஊடாக அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. அரசாங்க சேவைப் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தொடர்பான பொது சேவை ஆணைக்குழவின் நடைமுறை ஒழுங்கு விதிக் கோவை பாகம் I இன் பொதுவான நிபந்தனைகளுக்கு உங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

12. இவ்வறிவித்தல் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் ஏதாவது முரண்பாடுகள் அல்லது வேறுபாடுகள் இருந்தால், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலே சரியானதாகக் கொள்ளப்படும்.

பொது சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் நியதியகளுக்கமைய

Anura Jayawickrama
Secretary
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10, Sri Lanka.

**அனுர ஜயவிக்கிரம**
செயலாளர்
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு